# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்

**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; நிறுவகத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.**

*திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சர் அவர்களால் 2017, யூலை மாதம் 05 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, மே மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***190 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 18.00*** ***தபாற் செலவு : ரூபா 15.00***

2-PL 005300 - 475 (2017/07)

*ச.வ—ஓ. 61/2006.*

**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; நிறுவகத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*முன்னுரை.*

*இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகமானது 1957 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க, மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பணிப்பாளர் சபை தீர்மானத்தைப் பின்பற்றி தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நிருவாகத்தின் கீழ் இருந்துள்ளதாதலாலும்:*

*அத்துடன் 1978 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டமானது 1957 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க, மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தை நீக்கிவிட்டு இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையைத் தாபித்துள்ளதாதலாலும், அதன் விளைவாக இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் நிர்வாகமானது மத்திய போக்குவரத்து சபைக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதாதலாலும்:*

*அத்துடன் அமைச்சுக்கள் காலத்துக்குக்காலம் மாறியமையின் விளைவாக இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் நிருவாகம் சம்பந்தமாக இப்பொழுது சிரமங்கள் எழுந்துள்ளனவாதலாலும் எனவே தனிவேறான சட்ட உருவகமொன்றைச் சட்டவாக்கத்தின் மூலம் தாபிப்பதற்கும் மற்றும் அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் குறித்துரைப்பதற்கும் ஏற்பாடு செய்வது இப்பொழுது அவசியமாக வந்துள்ளதாதலாலும்:*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

2-PL 005016 - 475 (2017/02)

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், (இதனகத்துப்பின்னர் "நியமிக் கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்), வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

## இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தைத் தாபித்தல்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தைத் தாபித்தல்.

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்"எனக் குறிப்பீடு செய்யப்படும்), இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் எனவழைக்கப்பட வேண்டிய நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகமானது, (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

நிலைபெயர்கால ஏற்பாடுகள்.

**3.** (1) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதும், (இதனகத்துப்பின்னர் "இஜேதொபநி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் போக்குவரத்துச் சபையினது தீர்மானமொன்றினால் தாபிக்கப்பட்டதுமான இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகமானது 2ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட நிறுவகத்துக்கு இத்தால் கைமாற்றப்பட்டதாதல் வேண்டும்.

(2) இஜேதொப நிறுவகத்துக்காகவும் அதன் சார்பிலும், இஜேதொப நிறுவகத்தினால் அல்லது அதனுடன் அரசினால் அல்லது அரசுடன் செய்துகொள்ளப்பட்டவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் மற்றும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையான இஜேதொப நிறுவகத்தின் அல்லது அரசின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும், விடயத்துக்கேற்ப, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நிறுவகத்தினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் அல்லது நிறுவகத்தின் தனிசுகளாகவும் பொறுப்புக்களாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வலுவுக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இஜேதொப நிறுவகத்தின் நோக்கங்களுக்காக இஜேதொப நிறுவகத்துக்குக் குறித்தொதுக்கப்பட்டவையும் மற்றும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்துக்குக் கைமாற்றப்பட்டனவாதல் வேண்டுமென்பதுடன், எல்லா நோக்கங்களுக்காகவும் நிறுவகத்துக்குக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) இஜேதொப நிறுவகம் தொடர்பில் ஆக்கப்பட்டவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவையும் மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராதவையுமான எல்லா விதிகளும் ஒழுங்குவிதிகளும் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகவும் ஒழுங்குவிதிகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க விடயத்திற்கேற்ப, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அல்லது விதிகளினால் திருத்தவும்படலாம், அவற்றுக்கெதுவும் சேர்க்கவும்படலாம் அத்துடன் அவை ஒழிக்கவும்படலாம்.

(5) இஜேதொப நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராக, அல்லது இஜேதொப நிறுவகம் தொடர்பில் அரசினால் அல்லது அரசிற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் தொடுக்கப்பட்டுள்ளவையும் மற்றும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் அல்லது நியாயசபையின் முன்னர் முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், குற்ற வழக்குகளும், மேன்முறையீடுகளும் மற்றும் வேறு சட்ட நடவடிக்கைகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம்.

நிறுவகத்தின் பணிகள்.

**4**. நிறுவகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, மோட்டார் வாகனத் தொழில் மற்றும் வேறு தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சித் தொழில்கள் என்ற துறைகளில் தொழில்சார் பயிற்சிநெறிகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தலும், நிறுவகத்தினால் நேரடியாக அல்லது வேறு பகிரங்க அல்லது தனியார் துறை முகவர் நிலையங்களினூடாக அவற்றை நடாத்துதலும்;

(ஆ) பகிரங்க மற்றும் தனியார்துறை பங்குபற்றுகையினூடாக, நிறுவகத்தின் பயிற்சியாளர்களுக்கும் போதனையாளர்களுக்கும் பயிற்சியளிப்பதனை ஒருங்கிணைத்தலும் வசதிப்படுத்துதலும்;

(இ) மோட்டார் வாகனத் தொழில் மற்றும் விதித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பத் தொழில்கள் என்ற துறைகளில் தொழில் சார் பயிற்சி மீதான ஆராய்ச்சியை நிறைவேற்றுதல்;

(ஈ) நிறுவகத்தில் தொழில்சார் பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ள ஆட்களுக்கு வாழ்க்கைத்தொழில் வழிகாட்டுதலையும் ஆலோசனைச் சேவைகளையும் வழங்குதல்;

(உ) தேறியுள்ள பயிற்சி பெறுநர்களுக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தொழில்வாய்ப்புக்களை வழங்கு வதற்கு இயைபான அதிகாரசபைகளுக்கு உதவுதலும் மற்றும் இது தொடர்பாக உள்நாட்டு, வெளிநாட்டு ஒழுங்கமைப்புக்களுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதலும்;

(ஊ) நிறுவகத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள் களையுடையவையும், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ளவையுமான நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும் மற்றும் அத்தகைய நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதன் மூலம் மாணவ மற்றும் பணியாட்டொகுதிப் பரிமாற்றுகை நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதலும்;

(எ) நிறுவகத்தின் வாகனத் திருத்த நிலையத்திலும், வாகன நன்னிலைப்படுத்தல் நிலையத்திலும் மற்றும் வேலைக் களங்களிலும் உள்ள பயிற்சி பெறுநர்களுக்குச் செயல் முறைப் பயிற்சியைத் தொடர்ந்து வழங்குதல்;

(ஏ) விதித்துரைக்கப்பட்ட துறைகளில் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சியையும் கல்வியையும் நடாத்தும் நோக்கத்துக்காக நிறுவகத்தின் பிராந்திய நிலையங் களைத் தாபித்தல்;

(ஐ) இயைபான தொழில்களில் தொழில்நுட்பவியல்சார் முன்னேற்றங்களைக் கண்காணித்தலும், அதற்கிணங்க நிறுவகத்தின் வசதிகளை அபிவிருத்தி செய்தலும், நவீன மயமாக்குதலும் மற்றும் நாளதுவரையாக்குதலும்;

(ஒ) மோட்டார் வாகனத் தொழில் மற்றும் விதித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தேசிய மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புகளின் உதவியுடன் கருத்தரங்குகளையும், செயலமர்வுகளையும் மற்றும் மாநாடுகளையும் நடாத்துதல்;

(ஒ) மோட்டார் வாகனத் தொழில் மற்றும் விதித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பத் தொழில்கள் மற்றும் அத்தகைய தொழில்கள் மீதான தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி பற்றிய மாத வெளியீடுகளையும் பருவ இதழ்களையும் வெளியிடுதல்; அத்துடன்

(ஔ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உசித மாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

*நிறுவகத்தின் தத்துவங்கள்.*

**5**. நிறுவகமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அதன் அலுவலர்களையும் மற்றும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும் மற்றும் அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்;

(ஆ) விதித்துரைக்கப்பட்ட துறைகளில் தொழில்சார் பயிற்சியையும் கல்வியையும் வழங்குகின்ற நிறுவகத்தின் பிராந்திய நிலையங்களை முகாமை செய்தலும் பேணுதலும்;

(இ) விதித்துரைக்கப்பட்ட துறைகளில் பயிற்சியளிப்பவர்களாகத் தகைமைபெறுவதற்கு விரும்புகின்ற ஆட்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், நெறிகளையும் நடாத்துதலும், அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களையும், நெறிகளையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்குச் சான்றிதழ்களையும் திப்புளோமாக்களையும் அளித்தலும்;

(ஈ) நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கும், நெறிகளுக்கும் தேவையான எந்திரத் தொகுதியை அல்லது மூலப்பொருட்களை மற்றும் அத்தகைய வேறு சாதனங்களைக் கொள்வனவு செய்தல்;

(உ) மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க, தேசிய மட்டப் பரீட்சைகளையும் சோதனைகளையும் நடாத்துதல்;

(ஊ) விதித்துரைக்கப்பட்ட பயிற்சித் துறைகளில் பயிற்சி பெறுநர்களினால் பேணப்பட்ட நியமங்களையும் பெறப்பட்ட பெறுபேறுகளையும் காலத்துக்குக்காலம் மதிப்பீடு செய்தலும், நலன்சீர்தூக்கி பார்த்தலும் மற்றும் அவற்றுக்கு அவசியமான சீராக்கங்களைச் செய்தலும்;

(எ) நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து அதிகபட்சப் பெறுபேறுகளைப் பெறுவதற்கெனப் புதிய தொழில்நுட்பங்களையும் சாதனங்களையும் அறிமுகப்படுத்துவதனை மேம்படுத்துதல்;

(ஏ) நிறுவகத்தின் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல்,ஈடுவைத்தல் அல்லது வாடகைக்கு விடுதல், அடைமானம் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ஐ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது நிறுவகத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவரினூடாகவாயினுஞ்சரி, செய்துகொள்ளுதலும் நிறைவேற்றுதலும்;

(ஒ) பின்வருவன தொடர்பிலான விதிகளை ஆக்குதல்:-

(i) நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனங்கள், பதவியுயர்வுகள், ஊதியம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பனவுட்பட, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகித்தல்;

(ii) நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட கற்கை நெறிகளும் பரீட்சைகளும்;

(ஓ) நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பயிற்சிக்காகவும் சேவைகளுக்காகவும் கட்டணங்களையும் ஏனைய விதிப்பனவுகளையும் அறவிடுதல்;

(ஔ) நிறுவகத்தின் பயிற்சிபெறுநர்களுக்கும், அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்கும் பொழுதுபோக்கு மற்றும் சேமநல வசதிகளையும், அலுவலக முறையான குடிமனைகளையும், இடவசதியையும் வழங்குதல்; அத்துடன்

(க) நிறுவகத்தின் அபிப்பிராயத்தில் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அல்லது உகந்தனவான அல்லது அதன் இடைநேர்விளைவான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

## பாகம் II

### சபையின் அமைப்பு

நிறுவகத்தின் நிருவாகம் முதலியன சபைக்கு உரித்தாக்கப் படுதல்.

**6**. (1) நிறுவகத்தின் அலுவலர்களினது நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு என்பன, (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளுநர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக, இச்சட்டத்தினால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

சபையின் அமைப்பு.

**7**. (1) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்; அதாவது —

(i) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(ii) திறைசேரிச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும், நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சின் பிரதிநிதியொருவர்;

(iii) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர்;

(iv) மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(v) இச்சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளர் - அதிபர்; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் “நியமன உறுப்பினர்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஏனைய நான்கு உறுப்பினர்கள்; அவர்களுள் ஒவ்வொருவரும் பொறிமுறை அல்லது மோட்டார் வாகன எந்திரவியல், மின்சார அல்லது இலத்திரனியல் எந்திரவியல், நிதி அல்லது சட்டம் என்ற துறைகளில் தகைமை கொண்டவர்களாயிருத்தல் வேண்டும்.

(2) நியமன உறுப்பினர் ஒவ்வொருவரும், பதவி விலகுவதன் மூலம், இறப்பின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) நியமன உறுப்பினர் ஒவ்வொருவரும், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்டதும், அப்பொருள்பட்டதுமான கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலேனும் விலகலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகுகையானது, அமைச்சரினால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(4) எவரேனும் நியமன உறுப்பினர், சுகவீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை

காரணமாக அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அவரினிடத்தில் செயலாற்றுவதற்கென வேறோராளை நியமிக்கலாம்.

(5) அமைச்சரானவர் அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் கருதுமிடத்து, குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக எவரேனும் நியமன உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாமென்பதுடன், அதன்மேல் அவ்வுறுப்பினர் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(6) நியமன உறுப்பினரொருவர் இறக்குமிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சரானவர் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்தில் வேறோராளை நியமிக்கலாமென்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(7) சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் எந்தப் பதவியின் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினரொருவராக உள்ளாரோ அந்தப் பதவியை அவர் வகிக்கும்வரை பதவி வகித்தல் வேண்டும்.

*சபையின் தவிசாளர்.*

**8**. (1) (இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சபையின் தவிசாளராகவிருப்பதற்கென நியமன உறுப்பினர்களுள் ஒருவரை அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளரானவர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அவரினிடத்தில் செயலாற்றுவதற்கென சபையின் வேறோர் உறுப்பினரை அமைச்சரானவர் நியமிக்கலாம்.

*(3)* அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்டதும், அப்பொருள் பட்டதுமான கடிதத்தின் மூலம் தவிசாளரானவர் பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவி விலகுகையானது, அது அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பயனுறுதலும் வேண்டும்.

*(4)* அமைச்சரானவர் அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினால், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகத் தவிசாளரை அத்தகைய பதவியிலிருந்து அகற்றலாம்.

**9**. ஆளொருவர் பின்வருமாறிருப்பின் சபையின் உறுப்பின ரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:- சபையின் உறுப்பினரொரு வராகவிருப்பதற் கெதிரான தகைமையீனம்.

(அ) அவர், பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத் தப்பட்டால்;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் ஒரு கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்கி முறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டு, பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவரான அல்லது வங்கி முறிந்தவரான ஆளொருவராகவிருந்தால்;

(ஈ) அவர் குற்றவியல் தவறொன்றுக்காக இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(உ) அவர், நிறுவகத்தினால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருந்தால் அல்லது துய்த்தால்.

*சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாகச் செல்லுபடியற்றனவாகக் கருதப் படமாட்டாது.*

**10.** சபையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றலாமென்பதுடன், நிறுவகத்தின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் அல்லது பெயர்குறித்த நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக இருத்தலோ அல்லது இருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

*சபையுறுப்பினர் களின் ஊதியம்.*

**11.** நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய வீதங்களிலும் சபையின் உறுப்பினர்கள் எல்லோருக்கும் அல்லது அவர்களுள் எவருக்கும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

*சபையின் கூட்டங்கள்.*

**12.** (1) சபையின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் ஒரு தடவையேனும் நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஐந்தாதலும் வேண்டும்.

(2) தவிசாளரானவர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் தம்முள்ளிருந்து அக்கூட்டத்துக்கான தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்குகள் மூலம் முடிபு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமமாகவிருக்கும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற உறுப்பினர், அவரது சொந்த வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றை உடையவராகவிருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது, அதன் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான அதன் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

*அமைச்சரின் பணிப்புக்கள்.*

**13.** அமைச்சரானவர் இச்சட்டத்தின் கீழ் சபையானது அதன் தத்துவங்களைப் பிரயோகித்தலிலும் மற்றும் அதன் பணிகளை நிறைவேற்றுவதிலும் எழுத்திலான அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்களைச் சபைக்கு விடுக்கலா மென்பதுடன், சபையானது அத்தகைய பணிப்புகளுக்குப் பயன் கொடுத்தலும் வேண்டும்.

*நிறுவகத்தின் செயற்பாடுகள் பற்றி நுண்ணாய்வு செய்யும்படி கட்டளை யிடுவதற்கு அமைச் சருக்குள்ள தத்துவம்.*

**14.** அமைச்சரானவர் அவசியமென அவர் கருதுமிடத்து, அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் நிறுவகத்தின் செயற்பாடுகள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் நுண்ணாய்வு செய்யப்படுவதற்கும் மற்றும் அவற்றின் மீது அறிக்கையிடப்படுவதற்கும் கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன் மேல், சபையானது அத்தகைய கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கு அத்தகைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லா வசதிகளையும் அளித்தலும், அத்தகைய தகவலைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

*நிதியத்தின் இலச்சினை.*

**15.** (1) நிதியத்தின் இலச்சினையானது –

(அ) சபையானது காலத்துக்குக்காலம் முடிவு செய்யக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப் பிலிருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்த கைய முறையில் மாற்றப்படலாம்;

(இ) சபையின் இரு உறுப்பினர்களின் சமூகத்திலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அத்துடன் அவர்கள் தாம் சமூகமாயிருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாதனத் தில் அல்லது ஆவணத்திலும் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் இலச்சினை எந்தச் சாதனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்கள் அல்லது ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றை நிறுவகமானது பேணுதல் வேண்டும்.

## பாகம் III

### நிறுவகத்தின் மதியுரைப் பேரவை, பணிப்பாளர் - அதிபர் மற்றும் பணியாட்டொகுதியினரை நியமித்தல்

நிறுவகத்தின் மதியுரைப் பேரவை.

**16.** (1) அமைச்சரானவர் சபையின் கலந்தாலோசனையுடன் (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்), நிறுவகத்தின் மதியுரைப் பேரவையென அறியப்படவேண்டியதும், பின்வருவோரைக் கொண்டதுமான மதியுரைப் பேரவையொன்றை நியமித்தல் வேண்டும்:-

(அ) 1985 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திலிருந்தான பிரதிநிதியொருவர்;

(ஆ) வெளிநாடுகளிலுள்ள வாகன உற்பத்தியாளர்களுக்காக, இலங்கையில் நியமிக்கப்பட்ட முகவர்களாகவுள்ள, இலங்கையிலுள்ள முன்னணிக் கம்பெனிகள் ஒவ்வொன்றிலிருந்தானவர்களான பிரதிநிதிகள் இருவர்;

(இ) மின்சார அல்லது இலத்திரனியல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள, இலங்கையிலுள்ள முன்னணிக் கம்பெனியொன்றிலிருந்தான, நிறைவேற்றலுவலர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ளவரான பிரதிநிதியொருவர்;

(ஈ) கொழும்பு டொக்யாட் லிமிற்றெற்றிலிருந்து நிறைவேற்றலுவலர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பிரதிநிதியொருவர்;

(உ) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பொறிமுறை எந்திரவியல் துறையிலிருந்தான சிரேட்ட விரிவுரையாள ரொருவர்; அத்துடன்

(ஊ) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திர மின் துகளியல் அல்லது மோட்டார் வாகன எந்திரவியல் துறையிலிருந்தான சிரேட்ட விரிவுரையாளரொருவர்.

(2) பேரவையின் பிரதான பணியானது, 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிறுவகத்தின் பணிகளுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் மீதும் சபைக்கும் மற்றும் அமைச்சருக்கும் விதப்புரைகளைச் செய்வதாதல் வேண்டும்.

(3) பேரவையின் தவிசாளர்,பேரவையின் உறுப்பினர்களிடையே யிருந்து அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், பதவி விலகுவதன் மூலம், இறப்பின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன்,காலங்கழிவதன் மூலம் பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினர்கள் மீள நியமிக்கப்படு வதற்குத் தகவுடையவர்களாதலும் வேண்டும்.

(5) பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்டதும், அப்பொருள்பட்டதுமான கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலேனும் விலகலா மென்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, அமைச்சரினால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதன் மேல் பயனுறுதலும் வேண்டும்.

(6) அமைச்சரானவர் அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் கருதினால், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகப் பேரவையின் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(7) பேரவையின் எவரேனும் உறுப்பினர் இறக்குமிடத்து, பதவிவிலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சர் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்தில் செயலாற்றுவதற்கென வேறோராளை நியமிக்கலாம் என்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(8) பேரவையின் கூட்டங்கள் ஒவ்வோராண்டிலும் குறைந்தபட்சம் இரு தடவைகளேனும் பேரவையின் தவிசாளரினால் கூட்டப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், தவிசாளரானவர், அவசியமென அவர் கருதுகின்றபோதெல்லாம் மற்றும் பேரவையின் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோரினால் அவ்வாறு செய்யும்படி எழுத்தில் கோரப்படும்போதெல்லாம் பேரவையின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(9) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

**17.** (1) அமைச்சரானவர் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டவரான ஆளொருவரை (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் - அதிபர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்), நிறுவகத்தின் பணிப்பாளர் - அதிபராக நியமித்தல் வேண்டும். இவர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்றலுவலராகப் பணியாற்றுதல் வேண்டும்.

நிறுவகத்தின் பணிப்பாளர் - அதிபரை நியமித்தல்.

(2) பணிப்பாளர் - அதிபருக்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

(3) பணிப்பாளர் - அதிபரானவர், சபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிருவாக அலுவல்களின் முகாமையும், நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நிருவாகமும் கட்டுப்பாடும் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் - அதிபரானவர், சபையின் அங்கீகாரத்துடன், அவ்வாறு செய்வது அவசியமானதென அவர் கருதும்போதெல்லாம், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைச் சபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், பணிப்பாளர் - அதிபரின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்களுக்கமைவாக அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

(5) பணிப்பாளர் - அதிபரின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், சபையானது, (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக் கமைவாக நிரந்தரமான நியமனமொன்று செய்யப்படும்வரை, பணிப்பாளர் - அதிபரின் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற் கெனச் சபையின் உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதி.

**18.** (1) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இஜேதொபநி இல் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் சேவையாற்றிய இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும். சபையினாலும் அத்தகைய அலுவலர்களினாலும் சேவையாளர்களினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது தொழில் முனைப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் சேவையிலிருந்து விலகுவதற்கு விரும்புகின்றவரும், (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப் பட்டவருமான அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர், விருப்பத்தெரிவு பற்றி அவருக்கு நிறுவகத்தினால் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் அவ்வாறு விலகலாம்.

(3) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று சேவையாற்றியவர்களும், (1)ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர்களும் சேவையாளர்களும் அல்லாதவர் களுமான இஜேதொபநி இன் அலுவலர்களும் சேவையாளர்களும், இஜேதொபநி இல் அலுவலர்கள் மீது சுமத்தப்பட்ட நியதி நிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறைந்தவராகவிராத அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது நிறுவகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) நிறுவகத்தின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் நிறுவகத்தினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது நிறுவகத்திற்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள ஆளொருவரை நிறுவகமானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் நிறுவகத்துக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக் காலப்பகுதி அத்தகைய உடன்படிக்கையின் கீழ் அவ்வாளின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) நிறுவகத்தின் வேண்டுகோளின் பேரில் மாகாணப் பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது நிறுவகத்தினாலும் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக ஓய்வூதிய அல்லது சகாயநிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(9) மாகாணப் பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலர் (8)ஆம் உட்பிரிவின் கீழ் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அவ்வாள் நிறுவகத்தின் வேறெவரேனும் அலுவலரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

**19**. நிறுவகமானது இப்பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவம் தவிர்ந்த அதன் தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எவற்றையும் நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய ஏதேனும் பணி அல்லது தத்துவம், நிறுவகத்தின் விசேடமான அல்லது பொதுவான பணிப்புக்கமைவாக அத்தகைய அலுவலரினால் அல்லது சேவையாளரினால் பிரயோகிக்கப்படுதலும் அல்லது நிறைவேற்றப்படுதலும் வேண்டும். *தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் நிறுவகத்தின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் கையளித்தல்.*

## பாகம் IV

### நிதி

**20**. (1) நிறுவகமானது (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். *நிறுவகத்தின் நிதியம்.*

(2) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இஜேதொபநி இன் வரவிற்கு இருக்கும் எல்லாப் பணங்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நிதியத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிறுவகத்தின் நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) நிறுவகமானது அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இலங்கையினுள் இருந்தேனுஞ்சரி இலங்கைக்கு வெளியே இருந்தேனுஞ்சரி எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் வருமானம், கட்டணங்கள், விதிப்பனவுகள், கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாக நிறுவகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(4) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) நிறுவகமானது இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப் படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

*நிறுவகத்தின் கடன் பெறுவதற்கான தத்துவங்கள்.*

**21.** நிறுவகமானது, அமைச்சரினதும் மற்றும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் ஒருப் பாட்டுடன், இச்சட்டத்தின் கீழான அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக நிறுவகத்துக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை, மேலதிகப்பற்று என்றவகையாக அல்லது வேறுவகையாகக் கடனாகப் பெறலாம் அல்லது கடன் நியதிகளின் மீது பேச்சுவார்த்தை நடாத்திப் பெறலாம்:

ஆயின், இப்பிரிவின் கீழ் நிறுவகத்தினால் கடனாகப் பெறப்பட்ட ஏதேனும் தொகை தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டு மொத்தம், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை எந்நேரத்திலேனும் விஞ்சுதலாகாது.

*1958 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல்.*

**22.** நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் 1958 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் அலுவலர்களுக்கும் சேவையாளர் களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*1980 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல்.*

**23.** நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் 1980 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*நிறுவகத்தின் நிதியாண்டு.*

**24.** நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல்.*

**25.** பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

*அசைவுள்ள மற்றும் அசைவற்ற அரச ஆதனம் நிறுவகத்துக்குக் கிடைக்கக்கூடிய தாக்கப்படுதல்.*

**26.** (1) நிறுவகத்தின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் அதற்குக் கிடைக்கக்கூடிய தாக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, (454ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் எந்நோக்கத்துக்காக அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை அளிக்கப்படவேண்டுமோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய நோக்கத்துக்காக நிறுவகத்திற்கென அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை ஒன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) நிறுவகத்தின் ஏதேனும் நோக்கத்துக்காக அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் தேவைப்படுத்தப்படுமிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் நிறுவகத்துக்குக் கைமாற்றுதலும் உரித்தாக்குதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் சம்பந்தமான கட்டளை எதுவும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாடின்றி, இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் நிறுவகத்துக்காக அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.

**27.** (1) அரச காணி தவிர்ந்த ஏதேனும் அசைவற்ற ஆதனம் நிறுவகத்தின் ஏதேனும் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகக் கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்தும், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அந் நோக்கத்துக்காக உத்தேசக் கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்தும், அவ்வாதனமானது பொது நோக்கமொன்றுக்காகத் தேவைப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க (460ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு நிறுவகத்துக்குக் கைமாற்றவும் படலாம்.

(2) காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் நிறுவகத்துக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட நிறுவகமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.

**28.** (27ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட நிறுவகமானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

நிறுவகத்தின் உறுப்பினர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

**29.** நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் மற்றும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

உறப்பட்ட செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்.

**30.** இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் பேரில் நிறுவகத்தினால் அல்லது சபை உறுப்பினரொருவரினால், பேரவை உறுப்பினரொருவரினால், பணிப்பாளர் - அதிபரினால் அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலரினால் அல்லது ஊழியரினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் நிறுவகத்துக்கெதிராக அல்லது அத்தகைய ஆளுக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்தினால் அல்லது அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், நிறுவகத்திற்கு அல்லது இப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய எவரேனுமாளிற்கு செலுத்தப்பட்ட அல்லது அதனால் அல்லது அவரால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுத்தொகை நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**31.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், பின்வருவனவற்றை விதித்துரைத்து, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்:-

(அ) நிறுவகமானது எந்தத் துறைகளில் தொழில்சார் பயிற்சி நெறிகள் மற்றும் கல்வி நெறிகளை நடாத்தலாமோ அந்தத் துறைகள்;

(ஆ) தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி மீதான வெவ்வேறு துறைகளில் போதனையாளர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட நியமங்கள்;

(இ) பயிற்சி பெறுநர்களுக்கும், அவர்கள் எந்தத் தாபனங்களில் அல்லது ஒழுங்கமைப்புக்களில் செயல்முறைப் பயிற்சிக்குட்படுகின்றனரோ அந்தத் தாபனங்களுக்கும் அல்லது ஒழுங்கமைப்புகளுக்கும் இடையே செய்து கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பயிற்சி ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படவேண்டிய நியதி நிபந்தனைகள்;

(ஈ) தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியின் வெவ்வேறு துறைகளில் பயிற்சி பெறுநர்களுக்கான பயிற்சிக் காலப்பகுதி;

(உ) தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியின் வெவ்வேறு துறைகளில் பயிற்சி பெறுநர்களினால் பின்பற்றப்படவேண்டிய செயல்முறைப் பயிற்சியின் மற்றும் நிறுவனஞ்சார் பயிற்சியின் வகைகள்;

(ஊ) இச்சட்டத்தின் கீழ் தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியைப் பொறுப்பேற்கின்ற தாபனங்களின் அல்லது ஒழுங்கமைப்புக்களின் கடப்பாடுகள்;

(எ) இச்சட்டத்தின் கீழ் தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிக்குட்படுகின்ற பயிற்சி பெறுநர்களின் கடப்பாடுகள்;

(ஏ) இச்சட்டத்தின் கீழ் தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிக்குட்படுகின்ற பயிற்சி பெறுநர்களின் வேலை மணித்தியாலங்களும் மற்றும் லீவு உரித்துடைமையும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன் கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியில் ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்.

**32.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய-

"உள்ளூரதிகார சபை" என்பது, ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அல்லது நிறை வேற்றப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும், நேரொத்ததாகவுள்ள அல்லது அவற்றை ஒத்த தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறை வேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது, தொழில்சார் பயிற்சி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்டவொரு மாகாண சபை என்று பொருளாகும்;

"இலங்கைப் போக்குவரத்துச் சபை" என்பது, 2005 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபை என்று பொருளாகும்.

"மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு" என்பது 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**33.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*